# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

## SESSIONS CASE NO. 188 / 2017

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW12<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | : Dr. Suresh Anandan |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 19th day of August, 2025.

**(A1 died, Charge abated against him. A2 absent, Petition filed and allowed.)**

<u>சாட்சி சத்தியப்பிரமானம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :</u>

**முதல் விசாரணை :**

தற்போது சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் மூத்த உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். சுமார் 22 வயதுமிக்க பெயர் தெரியாத ஒருவர் சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் கடந்த

12/09/2016 அன்று நள்ளிரவு 2.40 மணிக்கு உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டிருந்தார். அவர் 23/09/2016 அன்று வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றிருந்தார். அவருக்கு இடது தோள்பட்டையில் சிதைந்த காயங்களுடன் கூடிய எலும்பு முறிவு இருந்தது. அவருக்கு அறுவை சிகிச்சை செய்து டிஸ்சார்ஜ் செய்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன். கீழ்பாக்கம் மருத்துவமனையில் வழக்கிய அவசர பிரிவு விபத்து பதிவேடு எண் 0150117 **அ.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் காயச்சான்றிதழ் நான் வழக்கியது தான். காயச் சான்றிதழ் **அ.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்துபதிவேட்டில் கீழ்பாக்கம் அரசு பொது மருத்துவமனையில் 12/09/2016 நள்ளிரவு 12.30 மணிக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அதில் சுமார் 22 வயதுமிக்க பெயர், விலாசம் தெரியாத ஒரு ஆண் அவசர சிகிச்சை பெற வந்ததாகவும், அவருக்கு கழுத்தில் ஒரு மச்சமும், வலது முன்னங்கையில் ஒரு மச்சமும் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவரை லூக்காஸ் என்ற தலைமை காவலர் எண் 34414 மற்றும் திரு. மகேந்திரபாண்டியன் தலைமை காவலர் 35658, ராஜேந்திரன் ஆகியோர் அழைத்துவந்தாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவரை அழைத்துவந்தவர்களை விசாரித்தபோது அவருடைய காயங்கள் சண்டையிடும்போது 2 கோஷ்டிகள் சண்டையின் போது நடந்ததாகவும், நாகாத்தம்மன் கோவில் பொத்தேரி என்ற இடத்தில் 11/09/2016 இரவு 10.00 மணிக்கு நடந்ததாக கூறியுள்ளார். அவருடைய காயங்கள் கழுத்து பகுதியில் 10x5x5 cm சிதைந்த காயம், 15x5x5 cm சிதைந்த காயம், எலும்புகள் தெரியும்படி, தசைகள் கிழிந்த நிலையிலும், இடதுதோள்பட்டையில் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாக போலீசார் அடிபட்டநபரின் பெயர் ராஜேஷ் என்று பின்னர் கூறினார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

கீழ்பாக்கம் அரசு மருத்துவமனையில் பதிவான விபத்துபதிவேட்டில் நேரம் நள்ளிரவு 12.30 மணி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அடிபட்ட

நபரை போலீசார் தான் அழைத்துவந்தார்கள் என்றால் அவ்வாறு தான் விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் பெயர், முகவரி தெரியாத நபர் என்று விபத்துபதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொதுவாக சுயநினைவுடன் இருந்தால் பெயர் கேட்டு தெரிந்துகொள்வோம் என்றால் சரிதான். அடிபட்ட நபர் சுயநினைவுடன் இல்லை ஆகவே தான் பெயர் கேட்ட முடியவில்லை என்றல் ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன். ஆகவே எனக்கு தெரியாது. விபத்துபதிவேட்டில் சுயநினைவு இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது பதில் கூறவில்லை என குறிப்பு உள்ளது. வெளிப்புற காயங்களை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அடிபட்ட நபரை 3 போலீசார் தான் அழைத்து வந்தார்கள் என்றால் சரிதான். நான் அளித்த காயச்சான்றிதழிலும் அடிநபரின் பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். IP 99979 என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி காயம் எந்த ஆயுதத்தால் ஏற்பட்டிருக்க கூடும் என்று ஆயுதத்தை காட்டி போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். விபத்துபதிவேட்டில் அடிநபர் எவ்வாறு மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டார் என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.